# 7 இயேசுவின் பிறப்பு



படம் 7.1 - இயேசுவின் பிறப்பு

பீட்டர் : குழந்தையொன்றின் அழுகுரல் கேட்கின்றது.

அந்தோனி : ஆமாம். யாருடைய குரல் அது ?

மரியாள் : அக் குரல் யாருடையது என நான் கூறுகிறேன். ஒரு நாள் நான் வீட்டில் இருந்தேன். கடவுளின், கபிரியேல் என்னும் வான தூதர் என்னிடம் வந்தார்.

வானதூதர் : அருள் மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்.

மரியாள் : நான் மிகவும் அச்சம் அடைந்தேன். அப்போது

வானதூதர் : மரியா, அஞ்ச வேண்டாம். கடவுளின் அருளை கண்டடைந்துள்ளீர். இதோ கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர். அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர்.

மரியாள் : இது எப்படி நிகழும்? நான் கன்னி ஆயிற்றே ?

வானதூதர் : தூய ஆவி உம்மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும். ஆதலால் உம்மிடம் பிறக்கப் போகும் குழந்தை தூயது. அக் குழந்தை இறைமகன் எனப்படுவார். உம் உறவினராகிய எலிசபெத்தும் தம் முதிர்ந்த வயதில் ஒரு மகனைக் கருத்தரித்திருக்கிறார். கருவுற இயலாதவர் என்று சொல்லப்பட்ட அவருக்கு இது ஆறாம் மாதம். ஏனெனில், கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை.

மரியாள் : ''நான் ஆண்டவரின் அடிமை. உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்'' எனக் கூறி இறை சித்தத்திற்கு நான் தலை சாய்த்தேன்.

பீட்டர் : உம்மை ஏற்றுக்கொள்வதற்கு யோசேப்பு சம்மதித்தாரா?

மரியாள் : இல்லை. ஆனால் கடவுளின் தூதர் அவருக்கு கனவிலே தோன்றினார். நான்கருவுற்றிருப்பதுதூய ஆவியினாலேயே என்றும் பெற்றெடுக்கும் மகனுக்கு ''இயேசு'' எனப் பெயரிடுமாறும் இதனால் எசாயா இறைவாக்கினர் முன் உரைத்தது நிறைவேறும் எனவும் கூறினார். அவரும் இறை சித்தத்திற்குக் கீழ்படிந்தார்.

அந்தோனி : இயேசு எங்கே பிறந்தார் ?

மரியாள் : அது ஒரு பெரிய கதை. அக்காலத்தில் அகுஸ்து சீசர் தம் பேரரசு முழுவதும் மக்கள் தொகையைக் கணக்கிடுமாறு கட்டளை பிறப்பித்தார்.

அறிவிப்போன் : செவிசாயுங்கள்! செவிசாயுங்கள்!
பேரரசின் மக்கள் தொகையைக் கணக்கெடுப்பதற்காக அனைவரும் தத்தம் ஊருக்குச் சென்று பெயரைப் பதிவு செய்யுங்கள்.

மரியாள் : யோசேப்பு, தாவீதின் வழிமரபினராதலால் அவரும் நானும் கலிலேயாவின் நாசரேத்து ஊரிலிருந்து புறப்பட்டு யூதேயாவிலுள்ள பெத்லகேம் என்ற ஊருக்குச் சென்றோம். அப்போது குழந்தை இயேசு பிறப்பதற்கான நாளும் வேளையும் நெருங்கியது. கருமுகில் சூழ்ந்தது. இரவைக் கழிப்பதற்காக யோசேப்பு ஒரு விடுதியைத் தேடினார்.

| | | |
|---|---|---|
| யோசேப்பு | : | இன்று, இங்கே தங்குவதற்கு எமக்கு இடமளிப்பீர்களா? |
| விடுதி பொறுப்பாளர் | : | இன்று எமது விடுதியிலே மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். இங்குள்ள எந்த விடுதியிலும் இடம் கிடைக்குமென நான் நினைக்கவில்லை. இருப்பினும் உமது மனைவிக்கு இப்போது கஷ்டமாக இருப்பதால், விருப்பமாயின் எமது மாட்டுத்தொழுவத்தில் தங்கியிருங்கள். |
| யோசேப்பு | : | மிக்க நன்றி. |
| பீட்டர் | : | என்ன? குழந்தையை மாட்டுத் தொழுவத்தில்தான் பிரச வித்தீர்களா? |
| மரியாள் | : | ஆம், நான் இறை சித்தத்திற்குத் தலைசாய்த்து பிறந்த தலை மகனை துணிகளில் பொதிந்து தீவனத் தொட்டியில் கிடத்தினேன். அப் பகுதியில் உள்ள வயல்வெளியில் இடையர்கள் தங்கி இரவெல்லாம் தங்கள் கிடையை காவல் காத்துக் கொண்டிருந்தபோது |
| வானதூதர் | : | "அஞ்சாதீர்கள். இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று ஆண்டவராகிய மெசியா எனும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார். குழந்தையைத் துணிகளில் சுற்றித் தீவனத் தொட்டியில் கிடத்தியிருப்பதைக் காண்பீர்கள். இதுவே உங்களுக்கு அடையாளம். |
| இடையர்கள் | : | அதோ, வானக தூதர்கள் புகழ்ச்சிப் பாடல் பாடுகிறார்கள். நாமும் பெத்தலேகம் சென்று அவரை வணங்குவோம். |
| அந்தோனி | : | இடையர்கள் மட்டுமா இயேசுவைப் பார்க்க வந்தார்கள்? |
| மரியாள் | : | இல்லை. இயேசு பிறந்ததைத் தெரிவிப்பதற்கு வானிலே விண் மீன் எழுந்தது. கிழக்கிலிருந்து ஞானிகள் மூவர் வந்தனர். அவர்கள் அரச மாளிகைக்குச் சென்றனர். |
| ஞானிகள் | : | யூதர்களின் அரசராகப் பிறந்திருக்கிறவர் எங்கே? அவரது விண் மீன் எழக்கண்டோம். அவரை வணங்க வந்திருக்கிறோம். |
| ஏரோது அரசன் | : | எனக்குத் தெரியாது. விசாரித்துப் பார்க்கிறேன். (ஊழியரை அழைத்து) ''எல்லாத் தலைமைக் குருக்களையும் மறை நூல் அறிஞர்களையும் இங்கு வரச் சொல்லுங்கள்.'' |

தலைமைக் குருக்கள் : அரசே, எம்மை அழைக்கக் காரணம் என்ன?

ஏரோது அரசன் : இயேசு எங்கே பிறந்துள்ளார்?

தலைமைக் குருக்கள் : அரசே, யூதேயாவின் பெத்லகேம் நகரில்.

ஏரோது அரசன் : நீங்கள் எவ்வாறு அறிந்தீர்கள்?

தலைமைக் குருக்கள் : இறைவாக்கினர் நூலிலே குறிப்பிடப்பட்டுள்ளது..

ஏரோது அரசன் : (யாருக்கும் தெரியாமல் ஞானிகளை அழைத்து) நீங்கள் சென்று குழந்தையை குறித்து திட்டவட்டமாகக் கேட்டு எனக்கு அறிவியுங்கள். நானும் சென்று அக்குழந்தையை வணங்க வேண்டும்.

முதலாம் ஞானி: அதோ,.... கிழக்கில் நாம் கண்ட விண் மீன் அந்த மாட்டுத் தொழுவத்திற்கு அண்மையில் நின்றுவிட்டது.

இரண்டாம் ஞானி : நாம் உள்ளே போவோம். நாம் கொண்டுவந்துள்ள பொன்,சாம்பிராணி,வெள்ளைப்போளம் ஆகியவற்றை காணிக்கையாகக் கொடுத்து, நெடுஞ் சாண்கிடையாய் விழுந்து வணங்குவோம்.

அந்தோனி : அந்த ஞானிகள் ஏரோது அரசனுக்கு குழந்தையைப் பற்றிக் கூறினார்களா?

மரியாள் : இல்லை. ஏரோதிடம் திரும்பிப் போக வேண்டாமெனக் கடவுள் அவர்களைக் கனவில் எச்சரித்ததால் அவர்கள் வேறு வழியாகத் தம் நாடுகளுக்குச் சென்றார்கள்.

பீட்டர் அந்தோனி : உங்களைப் போல தினமும் இறை சித்தத்தை நிறைவேற்றுவதற்கு நாமும் விருப்பமாக இருக்கிறோம்.

மரியாள் : இறை சித்தத்தை நிறைவேற்றுவதற்கு உங்களுக்கு வரம் அருளுமாறு நானும் அவரிடம் செபிக்கிறேன்.

## இயேசுவுக்குப் பெயரிடுதல்

குழந்தைக்கு விருந்தசேதனம் செய்ய வேண்டிய எட்டாம் நாள் வந்தது. தாயின் வயிற்றில் உருவாக முன்பே வானதூதர் சொல்லியிருந்தவாறு அதற்கு இயேசு என்று பெயரிட்டார்கள்.

(லூக் 2 :21)

## இயேசுவைக் கோயிலில் அர்ப்பணித்தல்

மோசேயின் சட்டப்படி தூய்மைச் சடங்கை நிறைவேற்ற வேண்டிய நாள் வந்தபோது குழந்தையை ஆண்டவருக்கு அர்ப்பணிக்க அவர்கள் எருசலேமுக்குக் கொண்டு சென்றார்கள். ஏனெனில் ''ஆண் தலைப்பேறு அனைத்தும் ஆண்டவருக்கு அர்ப்பணிக்கப்படும்'' என்று அவருடைய திருச்சட்டத்தில் எழுதியுள்ளது. அச்சட்டத்தில் கூறியுள்ளவாறு ஒரு சோடி மாடப் புறாக்கள் அல்லது இரு புறாக் குஞ்சுகளை அவர்கள் பலியாகக் கொடுக்க வேண்டியிருந்தது.

(லூக் 2 :22-24)

யூத இனத்தவரின் மறை, இனச் சம்பிரதாயச் சடங்குகள் சிலவற்றை மேலே தரப்பட்டுள்ள திருவிவிலிய பகுதிகளில் காண்கிறோம். அவை,

- ★ எட்டாம் நாள் விருத்தசேதனம் செய்தல்.
- ★ பெயரிடுதல்.
- ★ தூய்மையாக்கும் சடங்கை நிறைவேற்றல்.
- ★ தலைப்பேறான குழந்தையை ஆண்டவருக்கு அர்ப்பணித்தல்.

மரியாளும் யோசேப்பும் யூத மத, இன, சம்பிரதாயச் சடங்குகளை நிறைவேற்றினார்கள்.

இன்றைய சமூகத்தில் பலர் இன, மத சம்பிரதாயச் சடங்குகளைக் கருத்திற்கொள்வதே இல்லை. ஆனால் திருக்குடும்பம் அவற்றிற்கு மதிப்பளித்து எமக்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ்கிறது. எட்டாம் நாளிலே குழந்தை இயேசுவுக்கு விருத்தசேதனம் செய்யப்பட்டது. வானதூதர் சொல்லியிருந்தவாறு ''இயேசு'' எனப் பெயரிடப்பட்டது. அவ்வாறே மோசேயின் சட்டப்படி தூய்மைச் சடங்கை நிறைவேற்ற குழந்தை இயேசு எருசலேம் ஆலயத்தில் அர்ப்பணிக்கப்பட்டார்.

இவற்றிலிருந்து இன, மத சம்பிரதாய சடங்குகளுக்கு நாமும் மதிப்பளிக்க வேண்டும் என்பது தெளிவாகக் காட்டப்படுகிறது.

**லூக் 2 :1 - 24, மத் 2 :1 - 12, மேற்கூறப்பட்ட நத்தார் நாடகம் ஆகியவற்றின் உதவியோடு கீழ்காணும் பயிற்சியை செய்க.**



### மேலிருந்து கீழ்

01. யோசேப்பு இந்த மரபைச் சேர்ந்தவர்.
02. இயேசுவின் பிறப்பைப்பற்றி இறைவாக்கு உரைத்த இறைவாக்கினர்
03. இயேசு பிறந்த இடம்.
06. பேரரசரின் கட்டளையை மக்களுக்கு அறிவிக்கப்பயன்படுத்திய கருவி
08. மார்கழி மாதம் 25 ஆம் தினத்தில் இது கொண்டாடப்படுகிறது.
12. ஞானிகளின் காணிக்கைளில் இதுவும் ஒன்றாகும்.

### இடமிருந்து வலம்

02. மரியாவின் உறவு முறையானவர் இவராகும்.
04. கபிரியேல் தூதன் இவருக்கு மங்கள வார்த்தை கூறினார்.
05. நத்தார் தினத்தில் கிறிஸ்தவ வீடுகளில் இது அமைக்கப்படுகிறது.
07. ஞானிகள் ஏரோது அரசனைச் சந்திக்கச் சென்ற இடம் இதுவாகும்.
09. நத்தார் தினத்தில் சிறுவர்களுக்குப் பரிசுப் பொருட்களை இவர் கொண்டு வருவார்.
10. மக்கள் தொகையை கணக்கிடுமாறு கட்டளையிட்ட பேரரசரின் பெயர்.
11. இயேசுவின் பிறப்புப் பற்றிய புகழ்ச்சிப் பாடலைப் பாடியவர்கள் இவர்கள் ஆவர்.

**செயற்பாடு**

1. இன, மத - சம்பிரதாய சடங்குகளுக்கு திருக்குடும்பம் மதிப்பளித்த சந்தர்ப்பங்கள் இரண்டை எழுதுக.
2. உமது வகுப்பில் நல்லுறவையும் ஒற்றுமையையும் வளர்ப்பதற்கு நீர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மூன்றை எழுதுக.
3. நத்தார் தினத்திலே உமது குடும்பத்தினருடன் இணைந்து நீர் செய்யக் கூடிய நற்செயல்கள் மூன்றை எழுதுக.
4. நத்தார் வாழ்த்து அட்டை ஒன்றை வடிவமைக்குக.



***வாழ்க்கைக்கு........***

- ★ *தேசிய, மறை தொடர்பான சம்பிரதாய சடங்குகளுக்கு மதிப்பளிப்போம்.*
- ★ *தருணம் கிடைக்கும்போதெல்லாம் கைவிடப்பட்டோருக்கு உதவி செய்வோம்.*
- ★ *நத்தார் காலத்தில் வீட்டில் நத்தார் குடில் அமைப்போம்.*
- ★ *மத வழிபாட்டுத் தலங்களில் மதிப்புடன் நடந்து கொள்வோம்.*